DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT,
RAMANATHAPURAM

**CC.No. 167/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 07th day of January 2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 1** | கிராமம் | : | கீழக்கரை |
| பெயர் | : | நுஜூஹத் ரிஹானா | தாலுகா | : | கீழக்கரை |
| க/பெ. | : | அப்பாஸ் | சமயம் | : | முஸ்லிம் |
| வயது | : | 40 | ஜாதி | : | -- |
| தொழில் | : | டெய்லரிங் | | | |

<u>நாள்: 07.01.2025</u>
<u>நேரம்: 12.30</u>

எதிரி ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதன்மை விசாரணை:</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து டெய்லரிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். நான் இராமநாதபுரம் சத்யா ஏஜென்சியில் 2019 ம் வருடம், ஜூன் மாதம் 32 inch அளவுள்ள Haier டிவி வாங்கினேன். அந்த டிவி வாங்கி சிறிது நாட்களில் பழுதானது. நான் சத்யா ஏஜென்சிக்கு போன் செய்து கேட்டபோது, டிவியை கொண்டு வந்து கொடுங்கள், சரிசெய்து தருகிறோம், அதுவரைக்கும் வேறு டிவி தருகிறோம் அதை வைத்து பார்த்து கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். அதன்பிறகு நான் டிவியை கொடுத்து விட்டு, வேறு டிவி வாங்கி வந்து பார்த்து கொண்டிருந்தோம். அந்த டிவியும் சரியாக ஓடவில்லை. நான் திரும்பவும் சத்யா ஏஜென்சிக்கு போன் செய்து சொன்னபோது, அந்த டிவியை கொண்டு வாருங்கள், வேறு டிவி தருகிறோம் என்று மறுபடியும் சொன்னார்கள். அப்போது தான் ஆஜர் எதிரி எங்கள் வீட்டிற்கு டிவியை மாற்ற வந்தார். வந்தவர் டிவியை மாற்றி விட்டு சென்றுவிட்டார். அதன்பிறகு டிவிக்கு எந்த பிரச்சனையும் இல்லை.

26.01.2020ம் தேதி பகல் 12.00 – 1.00 மணிக்குள்ளாக தொடக்க எண். 89 என்ற எண் கொண்ட அலைபேசியில் இருந்து தொடர்ந்து காலும், வீடியோகாலும் வந்து கொண்டிருந்தது. நான் டிவிக்காக தான் பேசுகிறார்கள் என்று அழைப்பை எடுக்கவில்லை. அதன் பின்பு எனது அலைபேசி எண்ணிற்கு, ஆபாசமான குறுஞ்செய்தி வந்தது. அந்த செய்தியை எதிரி அனுப்பியிருந்தார். அதன்பிறகு சென்னையில் வேலை பார்த்து கொண்டு இருந்த எனது கணவருக்கு போன் செய்து சொன்னேன். எனது கணவர் அந்த குறுஞ்செய்தியை ஸ்கிரீன்சாட் எடுத்து அனுப்ப சொன்னார், நான் அனுப்பினேன். அதன்பிறகு எதிரி, அந்த போனை சுவிட்ச்ஆப் செய்துவிட்டார். அதன்பிறகு நான் உடம்பு சரியில்லை என இருந்துவிட்டேன். அதன்பிறகு பிப்ரவரி 2ம் தேதி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். **தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். எதிரி எனக்கு அனுப்பிய ஆபாச குறுஞ்செய்தி தற்போது என்னிடம் காட்டப்படுவது தான். அந்த குறுஞ்செய்தி அ.சா.ஆ.2 ஆகும்**. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவத்திற்கு 8 நாட்களுக்கு பின்னர் தான் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் நான் 2 நாட்கள் கழித்து புகார் கொடுத்தேன், ஆனால் காவல் நிலையத்தில் உடன் குடும்பத்தில் உள்ள ஆண்நபர்கள் வரவேண்டும் என்று சொல்லி புகாரை வாங்கவில்லை, எனது சகோதரர்கள் வெளிநாட்டில் வேலைசெய்து வருவதால், எனது கணவர் சென்னையில் இருந்து வந்தபிறகு 02.02.2020 அன்று போலிசார் எனது புகாரை எடுத்து கொண்டார்கள். நான் முதலில் புகார் கொடுத்துவிட்டு, வந்துவிட்டேன் என்றாலும், எனது கணவர் வந்தபிறகு தான் நான் மறுபடியும் காவல் நிலையம் சென்றேன் என்றாலும் சரிதான். நான் புகார் கொடுத்த பிறகு மனுரசீது கொடுத்தார்களா என்றால் 02.02.2020 அன்று மனுரசீது கொடுத்தார்கள். இந்த விவரத்தை போலிஸ் என்னை விசாரணை செய்தபோது நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

02.02.2020ம் தேதி நானும், எனது கணவரும் எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்றோம் என்றால் காலை 10.30 – 11.00 மணி இருக்கும். புகாரை நான் எழுதவில்லை என்றாலும், வேறு நபர் தான் புகாரை எழுதினார் என்றாலும், அந்த புகாரில் நான் கையொப்பம் மட்டும் தான் செய்தேன் என்றாலும் சரிதான், நான் புகாரை எழுதும் மனநிலையில் இல்லாததால் என்னுடன் வந்த எனக்கு தெரிந்தவர் எழுதி கொடுத்தார். அந்த புகார்மனுவில் எனது கணவர் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனது போலிஸ் விசாணையின்போதும் புகார்மனுவை யார் எழுதி கொடுத்தது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். புகார்மனுவில் எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்ற விவரத்தை நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எனது புகார்மனுவில் ஒரு வருடத்திற்கு முன்பு சத்யா ஏஜென்சியில்

டிவி வாங்கியதாக தான் சொல்லியுள்ளேன் என்றாலும், எந்த தேதியில் டிவி வாங்கினேன் என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நான் புகாருடன் டிவி வாங்கியதற்கான ரசீதுகள் மற்றும் டிவி சர்வீஸ் சம்மந்தமான ஆவணங்களை கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

எந்த தேதியில் டிவி பழுதானது, எந்த தேதியில் டிவியை சர்வீஸ் செய்து கொடுத்தார்கள் என்ற விவரத்தை நான் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில், எந்தெந்த சர்வீஸ் எண்களுக்கு போன் செய்து டிவியை சரிசெய்து தரகேட்டேன் என்று எனது புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். 2 முறை டிவியை சரிசெய்ய கொண்டு சென்றபோது, வெவ்வேறு நபர்கள் தான் டிவியை மாட்டிதர வீட்டிற்கு வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல, ஒருமுறை நாங்களாகவே மாட்டி விட்டோம், 2வது முறை எதிரி வந்தார். புகாரில் குறிப்பிட்ட எண்ணில் இருந்து குறுஞ்செய்தி வந்ததாகதான் சொல்லியுள்ளேன் என்றாலும், வீடியோகால் அழைப்பு வந்ததாக சொல்லவில்லை என்றாலும் சரிதான்.

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை எந்த தேதியில் எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் தேதி ஞாபகமில்லை, காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். போலிஸ் விசாரணையில் எனது அலைபேசியை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை, வாங்கி பார்த்தார்கள். போலிஸ் என்னை விசாரணை செய்தபோது சத்யா ஏஜென்சியில் இருந்து எத்தனை முறை எனக்கு போன் செய்து, டிவி குறித்த ஃபீட்பேக் என்னிடம் கேட்டார்கள் என்ற விவரத்தை நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நான் எனது புகாரில் சத்யா ஏஜென்சி நிறுவனத்தை சார்ந்தவர்களையோ அல்லது ஹையர் நிறுவனத்தை சார்ந்தவர்களையோ சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். போலிசாரும் அவர்களை அழைத்து விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரியின் செல்போன் தொலைந்துவிட்டது என்றாலும், அந்த தொலைந்த செல்போனில் இருந்து எனக்கு குறுஞ்செய்தி வந்துள்ளது என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2025.01.07 17:12:22 +0530

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 167/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 07th day of January 2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW – 2 | கிராமம் | : | சல்லிமலை, இராமேஸ்வரம் |
| பெயர் | : | செய்யது அப்தாகிர் | தாலுகா | : | இராமேஸ்வரம் |
| த/பெ. | : | ரசீது | சமயம் | : | முஸ்லிம் |
| வயது | : | 50 | ஜாதி | : | -- |
| தொழில் | : | டிவி மெக்கானிக் | | | |

<u>நாள்: 07.01.2025</u>
<u>நேரம்: 12.55</u>

எதிரி ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதன்மை விசாரணை:</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து டி.வி மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 எனது தங்கை. 26.01.2020ம் தேதி அ.சா.1 ஆன எனது தங்கையின் செல்போனிற்கு, எதிரி அசிங்கஅசிங்கமான வார்த்தைகளால் குறுஞ்செய்தி அனுப்பியிருந்தார். தகவல் தெரிந்தவுடன் எனது தங்கை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் இராமேஸ்வரத்தில் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் நான் இராமேஸ்வரத்தில் தான் குடியிருந்து வந்தேன் என்றால் சரிதான். எதிரி, அ.சா.1ற்கு குறுஞ்செய்தி அனுப்பியதாக சொல்லப்படும் விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். இந்த சம்பவம் தொடர்பாக எனக்கு எத்தனை மணிக்கு தெரியவந்தது என்றால் 26.01.2020ம்தேதி மதியம் தெரியவந்தது. நான் எத்தனை

மணிக்கு புகார் கொடுக்க எனது தங்கையுடன் சென்றேன் என்றால் அன்றைய தினமே சென்றேன். அந்த குறுஞ்செய்தியை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் பார்த்தேன். எந்த அலைபேசி எண்ணில் இருந்து குறுஞ்செய்தி வந்தது என்றால் தெரியாது. நான் முதல்விசாரணையில் சொன்ன விவரங்களை தான் போலிஸ் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். எதிரியை நான் பார்த்ததில்லை என்றாலும், எதிரிக்கு எதிராக, எனது தங்கை கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, நான் எதிரியை பார்த்ததில்லை, ஆனால் நடந்த சம்பவங்கள் எனக்கு தெரியும்.

**மறுவிசாரணை – இல்லை**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2025.01.07 17:12:29 +0530